அலகு V

பாடம் 14

# பைத்தானில் C++ நிரல்களை தருவித்தல்

## கற்றலின் நோக்கங்கள்

இந்த பாடப்பகுதியை கற்றபின் மாணவர்கள் பின்வருவனவற்றை அறிந்து கொள்வார்கள்

- உறை இடுதல் (wrapping) என்றால் என்ன என்பதை புரிந்துக் கொள்ளுதல்.
- C++ செயற்கூறுகளையும் இனக்குழுக்களையும் பைத்தான் நிரல்களுக்குள் தருவித்தல்.
- இருநிரலாக்க மொழிகளிலும் செயலாக்கவல்ல சூழலை உருவாக்குதல்.
- பைத்தான் நிரல்களை இயக்குதல் மற்றும் பிழைத்திருத்தம் செய்தல்.

## 14.1 அறிமுகம்

பைத்தான் மற்றும் C++ ஒரு பொதுப்பயன் நிரலாக்க மொழியாகும். இருப்பினும் பைத்தான் C++ மொழியைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது.

| வ.எண் | பைத்தான் | C++ |
|---|---|---|
| 1 | பைத்தான் ஒரு ‘வரி மொழி மாற்றி’ (Interpreter) மொழியாகும். | C++ மொழி, ஒரு நிரல்பெயர்ப்பி (Complier) மொழியாகும். |
| 2 | பைத்தான் மாறும் தன்மைக் கொண்ட மொழியாகும். | C++ நிலையான தன்மைக் கொண்ட தொகுக்கப்பட்ட மொழி. |
| 3 | மாறியை அறிவிக்கும் போது, அது சார்ந்த தரவின வகையை குறிப்பிடத் தேவையில்லை | மாறியை அறிவிக்கும் போது, தரவினத்தை குறிப்பிட வேண்டும். |
| 4 | இது Scripting மற்றும் பொதுப் பயன் மொழியென இருவகையிலும் செயல்பட முடியும். | இது ஒரு பொதுப்பயன் நிரலாக்க மொழியாகும். |

ஆயினும், இவ்விரு மொழிகளும் ஒன்றுக்-கொன்று சரியான வகையில் பொருந்திக் கொள்ளும். பைத்தான் , பெரும்பாலும் scripting அல்லது "glue" மொழியாக பயன்படுத்தப்படுகிறது. அதாவது, மேல் நிலையிலுள்ள நிரல் பெரும்பாலும் C அல்லது C++ மொழிகளில் எழுதப்பட்டுள்ள செயல் முறைகளை அழைக்கும். ஏற்கனவே C++ ல் எழுதப்பட்டுள்ள நிரல் குறிமுறைகளை பைத்தான் நிரல் மூலம் அழைத்து, கையாளுவதற்கு பயனுள்ளதாக இருக்கும்.



12th Computer Science_TM Chapter 14.indd 266 11-01-2023 12:40:02